<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 194/2013 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | ஆறுமுகம் | நாள் | 23.09.2023 |
| தகப்பனார் பெயர் | சித்தன் | | |

**<u>2, 3, 5 முதல் 11 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>**

12) ஓலைப்பட்டி கிராம ச.எண்.248/1A3 ல் உள்ள நிலத்தை யார் யார் எல்லாம் சேர்ந்து கிரயம் பெற்றோம் என்றால், சித்தன், அம்மாசி மற்றும் பழனி ஆகிய மூவரும் சேர்ந்து தான் கிரயம் பெற்றோம். ச.எண்.248/1A3 ல் உள்ள நிலத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால், 2 ஏக்கர் 13 சென்ட் ஆகும். மேற்படி 2 ஏக்கர் 13 சென்ட் நிலத்தில் 1.6 ஏக்கர் நிலம் ஒருவரும், தலா 53–1/2 சென்ட் நிலங்களை இருவரும் பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால், சரிதான்.

13) மேற்படி 2 ஏக்கர் 13 சென்ட் நிலத்தில் 1 ஏக்கர் 6 சென்ட் நிலத்தை சித்தனும், தலா 53–1/2 சென்ட் நிலங்களை அம்மாசியும், பழனியும் பாகமாக பிரித்துக்கொண்டோம். மேற்படி ச.எண்.248/1A3 ல் உள்ள நிலமானது ச.எண்.248/1A1 மற்றும் ச.எண்.248/1A2 ஆகிய நிலங்களை ஒட்டி கிழபுறமாக உள்ளது என்றால், சரிதான்.

14) மேற்படி ச.எண்.248/1A3 ல் உள்ள நிலமானது மேட்டூர் – மேச்சேரி பிரதான சாலையிலிருந்து சிந்தாமணியூருக்கு பிரியும் தார்சாலைக்கும், மேற்குபுறமாக உள்ளது என்றால், சரிதான். மேற்படி ச.எண்.248/1A3 ல் 2 ஏக்கர் 13 சென்ட் நிலத்தில் சித்தன், அம்மாசி, பழனி ஆகியோர்களுக்கு பாகமாக பிரிந்த நிலங்களில் அவரவர்கள் வீடுகள் கட்டி வசித்து வருகிறார்கள் என்றால், சரிதான்.

15) மேற்படி ச.எண்.248/1A3 ல் உள்ள சொத்துக்களை தவிர எங்களது பூர்வீக சொத்துக்களான ச.எண்.248/1A1 மற்றும் ச.எண்.248/1A2 ஆகியவற்றிலுள்ள நிலங்களிலும் நாங்கள் வீடுகள் கட்டி வசித்து வருகிறோம் என்றால், சரிதான். ச.எண்.248/1A3 ல் உள்ள சொத்துக்களை நாங்கள் கிரயம் பெறுவதற்கு முன்பு சுமார் 50

ஆண்டுகளுக்கு முன்பே மேற்படி சிந்தாமணியூர் செல்லும் தார் சாலை இட்டேரி சாலையாக இருந்தது என்றாலும், அப்போதிருந்தே ச.எண்.248/1A1, ச.எண்.248/1A2 ஆகியவற்றிலுள்ள எங்கள் பூர்வீக சொத்துக்களுக்கு செல்வதற்கு மேற்படி இட்டேரி சாலையை தான் பயன்படுத்தி வந்தோம் என்றால், சரிதான். மேற்படி இட்டேரி ரோட்டிலிருந்து மேற்கிலுள்ள பகுதிக்கும் போகலாம், கிழக்கிலுள்ள பகுதிக்கும் போகலாம்.

16) அவ்வாறு இட்டேரி ரோட்டிலிருந்து கிழக்கிலும், மேற்கிலும் செல்லலாம் என்பதற்கு ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால், ஆவணங்கள் எதுவும் இல்லை. அது ஊர் பெரியவர்களால் நாங்கள் அனுபவிப்பதற்காக அப்போதே பாதையாக பிரித்து ஒதுக்கப்பட்டது. நான் சொல்வது போல் அவ்வாறு பாதை பிரித்து விடப்பட்டது என்பதை காண்பிக்க புல வரைபடம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், அதுகுறித்து எனக்கு தெரியவில்லை. மேற்படி தடவழி ஊர் பெரியவர்களால் பிரித்து விடப்பட்ட சங்கதியை என் வழக்குரையிலும், என் முதல் விசாரணை சாட்சியத்திலும் சொல்லியுள்ளேனா என்றால், சரியாக நினைவில்லை.

17) நான் சொல்வது போல் பிரதிவாதிகளது நிலத்தின் வழியாக அவ்வாறு எந்த தடவழியும் இல்லை என்றாலும், நாங்கள் ஆரம்ப காலத்திலிருந்தே சிந்தாமணியூர் தார் சாலையைதான் எங்களது பூர்வீக நிலங்களுக்கு செல்ல தடவழியாக பயன்படுத்தி வருகிறோம் என்றாலும், அதை மறைத்து தற்போது வழக்கிற்காக தடவழி பிரித்து விடப்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

18) எங்களது நிலத்திற்கு எந்த பக்கமாக பிரதிவாதிகளது நிலம் உள்ளது என்றால், தெற்குபுறமாக உள்ளது. பிரதிவாதிகளது நிலத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால், எனக்கு தெரியாது. பிரதிவாதிகளது நிலத்திற்கும் தெற்குபுறமாக சர்வே எண்.248/2ல் ஒரு நிலம் உள்ளது என்றாலும், அது பிரதிவாதிகள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்றாலும், அதுகுறித்து எனக்கு தெரியாது.

19) ச.எண்.248/1A1 மற்றும் ச.எண்.248/1A2 ஆகிய நிலங்களுக்கு மேற்குபுறமாக

பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட நிலம் உள்ளது என்றால், சரிதான். ஆனால், மேற்படி சர்வே எண்களை ஒட்டியவாறு மேற்குபுறம் கொளந்தை பையன் என்பவருக்கு 1 ஏக்கருக்கு குறைவாக நிலம் உள்ளது. மேற்படி நிலத்திற்கும் அடுத்து தான் பிரதிவாதிகளுக்கு சொந்தமான நிலம் உள்ளது.

20) ச.எண்.248/1A1 மற்றும் ச.எண்.248/1A2 ஆகிய நிலங்களிலிருந்து மேற்படி நிலங்களுக்கு மேற்குபுறம் அமைந்துள்ள பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட ச.எண்.247/1B ல் உள்ள 91 சென்ட் நிலத்திற்கு ச.எண்.248/2 ன் வழியாகத்தான் பிரதிவாதிகள் சென்று வருகிறார்கள் என்றால், அதுகுறித்து எனக்கு தெரியவில்லை.

21) நான் இவ்வழக்கை தாக்கல் செய்த பிறகு பிரதிவாதிகள் எனக்கு எதிராக அ.வ.எண்.341/2015 என்ற வழக்கை தாக்கல் செய்தனர் என்றால், சரிதான். மேற்படி அ.வ.எண்.341/2015 என்ற வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு, அவர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் மாதிரி வரைபடம் தான் மேற்படி அ.வ.எண்.345/2015 என்ற வழக்கில் இ.ம.எண்.1269/2015 ல் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த வரைபடம் என்றால், எனக்கு அதுகுறித்து தெரியவில்லை. மேற்படி நீதிமன்ற ஆணையர் நான் சொல்வது போல் தடவழி எதுவும் இல்லை என்றும், கல்கட்டு மட்டுமே உள்ளதாகவும், அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால், அதுகுறித்து எனக்கு தெரியவில்லை.

22) மேற்படி வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்துக்களை பார்வையிட்டு அதன் பௌதீக தன்மைகளை பரிசிலித்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், மேற்படி அறிக்கையிலோ, வரைபடத்திலோ நான் சொல்வது போல் எவ்வித பாதையோ, தடவழியோ பிரதிவாதிகளின் நிலத்திற்கு கிடையாது என்றாலும், ஆரம்ப காலத்திலிருந்தே நாங்கள் மேற்படி சிந்தாமணியூர் தார்சாலையிலிருந்து தான் எங்களது பூர்வீக நிலங்களுக்கு சென்று வருகிறோம் என்றாலும், பிரதிவாதிகளின் நிலத்தில் பாதை செல்வதாக நாங்கள் சொல்வது தவறானது என்றாலும், பிரதிவாதிகளுக்கு

இடையூறு செய்து சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றாலும், எனவே இவ்வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும், சரியல்ல.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.